

தூத்துக்குடி மாவட்டம் அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நேற்று முன்தினம் (13.05.2025), மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அரசு விழாவில், தூத்துக்குடி மாவட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் ரூ.19.23 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள 23 மருத்துவக் கட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.10.65 கோடி செலவில் 4 புதிய மருத்துவ கட்டடங்கள் மற்றும் 1 காந்த அதிர்வலை வரைவு உபகரணத்தை (MRI SCAN) பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் தலைமையில் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா (ஓட்டப்பிடாரம்), ஜி.வி.மார்க்கண்டேயன் (விளாத்திக்குளம்), மேயர் பெ.ஜெகன், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன், துணை மேயர் செ.ஜெனிட்டா, தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சிவகுமார், மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.யாழினி (தூத்துக்குடி), மரு.வித்யா (கோவில்பட்டி) உட்பட அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### ஜுன் 1ல் கழகப் பொதுக்குழு நடைபெறும்

# மதுரை உத்தங்குடியில் பந்தல் அமைக்கும் பணி!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – பி.மூர்த்தி நேரில் ஆய்வு!

மதுரை, மே 15 -

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் வரும் ஜுன் 1ஆம் தேதி மதுரையில் பொதுக்குழு நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டது. இதை அறிந்ததும் மதுரை மாவட்ட தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டு உற்சாகத்துடன் உள்ளனர். இதற்கான பணிகள் மதுரை உத்தங்குடியில் நடைபெற்று வருவதை அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.மூர்த்தி ஆகியோர் நேரில் ஆய்வு செய்தார்கள்.

அதன் விபரம் வருமாறு:-

மதுரை உத்தங்குடியில் வரும் ஜுன் 1ஆம் தேதி கழக மாநில பொதுக்குழு கூட்டம் பிரம்மாண்டமாக, வெகு சிறப்பாக இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் நடைபெற உள்ளது.

பிரம்மாண்டமான முறையில் இதற்கான பணிகள் இரவு பகலாக நடைபெற்று வருகிறது. சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை கழக முதன்மைச் செயலாளர் நகர்ப்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தார்கள்.

மேலும் மதுரையில் பொதுக்குழு நடைபெறும் என்று அறிவித்ததுடன் மதுரை மாவட்ட தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் பெரும் உற்சாகம் கொண்டு கழகத்தினர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்று மகிழ்விக்க தயாராகி வருகின்றார்கள்.

மதுரை உத்தங்குடியில் நடைபெற உள்ள கழக பொதுக்குழு ஒரு வரலாறு சிறப்புமிக்க பொதுக்குழுவாக அமையும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை எனும் வகையில் ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டு வருகின்றது.

அமைச்சர்கள் ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், ஈ.ராஜா மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உடன் இருந்தனர்.

### பொள்ளாச்சி பாலியல் வன்முறை வழக்கின் தீர்ப்பு:

# சி.பி.ஐ. கேடயத்தைத் தூக்கி புனிதர் வேடம் தரிக்க முயலும் பழனிசாமி!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கடும் தாக்கு!

**சென்னை, மே 15-**

**பொள்ளாச்சி பாலியல் வன்முறை வழக்கின் தீர்ப்பில் சி.பி.ஐ. கேடயத்தைத் தூக்கி புனிதர் வேடம் தரிக்க முயல்கிறார் பழனிசாமி என கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கையில் கண்டித்துள்ளார்.**

**ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**



பொள்ளாச்சி பாலியல் வழக்குத் தீர்ப்பை வரவேற்று அறிக்கை விட்டிருக்கும் அ.தி.மு.க. தன்னை தூயவன் போலக் காட்ட முயல்கிறது. முக்கியமான வழக்கில் கருத்து சொல்ல முயலும் போது நிர்வாகிகள் யாருடைய பெயரையும் பயன்படுத்தாமல் பொத்தாம் பொதுவாக ‘அ.தி.மு.க. அறிக்கை’ என வெளியிட்டிருக்கிறார்கள். பிறகு என்ன நினைத்தார்களோ எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி திருவாய் மலர்ந்திருக்கிறார். ‘நடுநிலையோடு சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டேன். அதற்கான நீதியே இன்று கிடைத்துள்ளது’ என சொல்லியிருக்கிறார்.

**பொள்ளாச்சி பாலியல் வழக்கை மறைத்த பழனிசாமி!**

அ.தி.மு.க.வினர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என தெரிந்ததுமே பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கை அன்றைக்கு ஆட்சியில் இருந்த எடப்பாடி பழனிசாமி அரசு மூடி மறைக்க முயன்றது. தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள், மகளிர் அமைப்புகள், மாணவர்கள் எனத் தமிழ்நாடு முழுவதும் பெரும் போராட்டங்கள் நடந்த நிலையிலும் பழனிசாமி அரசு வழக்கை சி.பி.ஐ.-க்கு மாற்றவில்லை.

2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேதியை மார்ச் 10-ம் தேதி தேர்தல் ஆணையம் அறிவித்த பிறகு பொள்ளாச்சி விவகாரம் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என அஞ்சி இரண்டு நாள் கழித்து அதாவது மார்ச் 12-ம் தேதி சி.பி.ஐ. விசாரணைக்கு பழனிசாமி அரசு பரிந்துரைத்தது. வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு ஒப்படைக்க 14-ம் தேதி அரசாணை வெளியிட்டார்கள்.

**உயர்நீதிமன்றம் கேட்ட பிறகு வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றிய பழனிசாமி!**

அதன்படி சி.பி.ஐ.-க்கு மாற்றினார்கள் என்றால் இல்லை. வழக்கை சி.பி.ஐ. வசம் ஒப்படைக்காமல் இழுத்தடித்தார்கள். “பொள்ளாச்சி பாலியல் வழக்கை சி.பி.ஐ.-க்கு மாற்றுவதாக அரசு அறிவித்த பிறகும் சி.பி.சி.ஐ.டி. விசாரிப்பது ஏன்?” என்று சென்னை உயர் நீதிமன்றம் 2019 மார்ச் 29-ம் தேதி கேள்வி எழுப்பியது. உடனே தமிழக அரசு வழக்கறிஞர் ’வழக்கை சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கும் பணி நடக்கிறது” எனச் சமாளித்தார்.

’பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் சி.பி.ஐ. விசாரணையை உயர்நீதிமன்றம் கண்காணிக்கும்’ என்று சென்னை உயர்நீதிமன்றம் 2019 அக்டோபர் 16-ம் தேதி அறிவித்தது. இதனால்தான் வழக்கு நியாயமாக நடந்து முடிந்து, இன்றைக்குக் குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைத்திருக்கிறது. அந்த வழக்கில் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் தண்டிக்கப்பட்டிருப்பதால் அதன் கறை தன் மீது விழுந்துவிடக் கூடாது என்பதற்காக சி.பி.ஐ. என்ற கேடயத்தைத் தூக்கிக் கொண்டு புனிதர் வேடம் தரிக்க முயல்கிறது அ.தி.மு.க.

**பொள்ளாச்சி வழக்கில் நாடகமாடிய அ.தி.மு.க.!**

“சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றப்பட்டதால் குற்றவாளிகள் தண்டனை பெற்றிருக்கிறார்கள்” எனப் பெருமை அடிக்கும் அ.தி.மு.க. அன்றைக்கு சி.பி.ஐ. எனச் சொல்லி எப்படியெல்லாம் நாடகம் ஆடியது என்பதை மக்கள் அறிவார்கள். புகார் அளித்த மாணவியின் சகோதரர் பூபாலனை குற்றவாளிகள் தரப்பு தாக்கியது. வழக்கை திரும்பப்பெற சொல்லி மிரட்டியது. பாதிக்கப்பட்ட பெண்களின் பெயர்களை எல்லாம் போட்டு அரசாணை வெளியிட்டார்கள். இவையெல்லாம் பாதிக்கப்பட்ட பெண்களின் தரப்பை அச்சுறுத்த அன்றைக்கு இருந்த பழனிசாமி அரசு மேற்கொண்ட அஸ்திரங்கள்.

**பாதிக்கப்பட்ட பெண்களின் பெயரை வெளியிட்ட அதிகாரி!**

பொள்ளாச்சி பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்கில், ‘வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றம் செய்து மாநில அரசு வெளியிட்டுள்ள அரசாணையைத் திரும்பப் பெற்று, பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயர் மற்றும் விவரங்கள் குறிப்பிடாத புதிய அரசாணையை வெளியிட வேண்டும். சம்பந்தப்பட்டப் பெண்ணின் பெயரைச் செய்தியாளர்களின் சந்திப்பின்போது பயன்படுத்திய காவல் அதிகாரி மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். பெயரைப் பயன்படுத்தியதால் அப்பெண்ணிற்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக ரூ. 25 லட்சம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும்’ என சென்னை உயர் நீதிமன்றம் மார்ச் 15-ம் தேதி உத்தரவிட்டது.

இதெல்லாம் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் பழனிசாமி ஆட்சிக்குக் கிடைத்த நற்சான்றிதழ்கள். அ.தி.மு.க. எவ்வளவு அரசியல் கேவலங்களை அரங்கேற்றினாலும் இறுதியில் உண்மை மட்டுமே வெல்லும்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நேற்று முன்தினம் (13.05.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல், வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் முன்னெடுப்புகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைக் கழக தணிக்கைக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (13.5.2025) அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தணிக்கைக் குழு உறுப்பினர்கள் கு.பிச்சாண்டி, தி.அ.முகமது சகி, மதுரை வ.வேலுச்சாமி, என்.சுரேஷ்ராஜன், ஏனாதி பாலசுப்பிரமணியன், வழக்கறிஞர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரை உத்தங்குடியில் (1.6.2025 அன்று) நடைபெற உள்ள கழக மாநில பொதுக் குழு கூட்டத்திற்கான முன்னேற்பாடுகளை கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், ஈ.ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றார்கள்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 15.05.2025 | திண்டுக்கல் கிழக்கு | ஆத்தூர் | அகரம், தாடிக்கொம்பு பேரூராட்சி. | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, செல்வக்குமார் |
| 2 | 16.05.2025 | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் | கள்ளிமந்தையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மில்லர் மண்டேலா |
| 3 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, எம்.எல்.ஏ., ரிஷி சந்தோஷ் |
| 4 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 5 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

இராமநாதபுரம் மற்றும் சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | இராமநாதபுரம் | பீமாஸ் வைஸ்ராய் ஹால், பாரதி நகர், இராமநாதபுரம். |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | சென்னை வடகிழக்கு | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 17.05.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | எழும்பூர் | அறிஞர் அண்ணா மாளிகை, சச்சிதானந்தம், 2–வது தெரு, கொசப்பேட்டை, சென்னை–12. |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | வில்லிவாக்கம் | டபிள்யூ.பி.ஏ.சவுந்திர பாண்டிய நாடார் பள்ளி வளாகம், என்.எம்.கே.தெரு, அயனாவரம், சென்னை–23. |
| | | திருவொற்றியூர் | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12-05-2025

கலைஞர் 100
1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி